DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 179 /2023**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்பம்மாள் | Husband Name –கேசவன் | |
| Age | 75 | Village – | தே.மீனாட்சிபுரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2026.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் தாக்கல்செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டுள்ளதா என்றால் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் நிலத்தை பிரதிவாதி அவருடைய நிலம் என உரிமை கோருகிறார் அதனால் இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். வாதி எந்த வருடம் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தாக்கல் செய்தார். வாதி தாக்கல்செய்யதுள்ள வழக்குரை சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்குரை சொத்தை பற்றி தெரியும் சர்வே எண் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சர்வே எண்களை குறித்து எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்கள் குறித்து எனக்கு தெரியாது, எனது கணவருக்கும் வாதிக்கும் தான் தெரியும். பிரதிவாதி பத்திரம் எழுதி வாங்கிய விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மாட்டுக்கொட்டகை, தென்னந்தோப்பு ஆகியவை வழக்கு சொத்தில் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை வாதி அவரது வழக்குரையில் சொல்லியுள்ளாரா இல்லையா என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி மோசடியாக பட்டா வாங்கினார் என்று நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரம்

எனக்கு எப்போது தெரியும் என்றால் தற்போது தான் தெரியவந்தது. அதை குறித்து எனது மகள் என்னிடம் தெரிவிக்கவில்லையா என்றால் தெரிவிக்கவில்லை. பிரதிவாதி எப்போது வழக்குரை சொத்திற்கு வந்து பிரச்சனை செய்தார் என்றால் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக பிரச்சனை செய்தார். பிரதிவாதி வழக்குரை சொத்தில் வந்து சண்டை போட்டாரா என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வழக்குரை சொத்திற்கு கிழக்கு பக்கம் வாதி நிலம் உள்ளதாக வழக்குரையில் வாதி சொல்லியுள்ளார் என்றும், வாதி நிலத்திற்கு கிழக்கு பக்கத்திற்கு என்னுடைய நிலம் உள்ளதா அல்லது வாதியின் நிலம் உள்ளதா என்றால் வாதிக்கு சிறிய துண்டு நிலம் உள்ளது எங்கள் நிலமும் உள்ளது. மேற்படி நிலத்தின் அருகே பிரதிவாதிக்கு நிலம் உள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதியின் நிலம் மிகத் தொலைவில் உள்ளது. வழக்குரையில் எனது மகள் மற்றும் மருமகனான வாதி கேரளாவில் வேலை செய்து வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாதி மற்றும் எனது மகள் கேரளாவில் வேலை செய்து வந்த போது வழக்குரை சொத்தை யார் பராமரித்து வந்தார் என்றால் வாதியும் வாதியின் தந்தையும் பராமரித்து வந்தார்கள். வாதி எனது மகள் முத்துமாரி என்பவரை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி எனது மருமகன் என்பதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றும், வாதி எனது மகளை திருமணம் செய்துள்ளதால் அவருக்கு எதிராக சாட்சியம் சொல்லமாட்டேன் என்றால் சரியல்ல நான் உண்மையை தான் சொல்கிறேன். வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்திற்கு மேற்கு பக்கம் யாருடை நிலம் உள்ளது என்றால் அய்யர் என்பவர் நிலம் உள்ளது. தெற்கு பக்கம் யாருடை நிலம் உள்ளது என்றால் இளங்கோ என்பவர் நிலம் உள்ளது. வடக்கு பக்கம் யாருடை நிலம் உள்ளது என்றால் பிறவி என்பவர் நிலம் உள்ளது. நான்

மேலே சொல்லியுள்ள நான்குமாலுக்கு கட்டுப்பட்ட சொத்தும் வழக்குரை சொத்தும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சர்வே எண்.112/15 ல் பாதி சொத்து பாத்தியம் உள்ளது என்றும், நான் சொல்லும் நான்குமாலுக்கு கட்டுப்பட்ட சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும், வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.01.20 17:27:53 +0530

District Munsif,
Bodinayakanur.